# Isa

## Chapter 49

Tamil Interlinear

Reference: Tamil Indian Revised Version (IRV)

1
- שִׁמְעוּ கேளுங்கள் H8085
- אִיִּים தீவுகளே H0339
- אֵלַי என்னிடத்தில் H0413
- וְהַקְשִׁיבוּ கவனியுங்கள் H7181
- לְאֻמִּים ஜனங்களே H3816
- מֵרָחוֹק தூரத்திலிருந்து H7350
- יְהוָה யெகோவா H3068
- מִבֶּטֶן கர்ப்பத்திலிருந்து H0990
- קְרָאָנִי அழைத்தார்-என்னை H7121
- מִמְּעֵי குடலிலிருந்து H4578
- אִמִּי என்-தாயின் H0517
- הִזְכִּיר நினைவுகூரினார் H2142
- שְׁמִי׃ என்-நாமத்தை H8034

> தீவுகளே, எனக்குச் செவிகொடுங்கள்; தூரத்திலிருக்கிற மக்களே, கவனியுங்கள்; தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் யெகோவா என்னை அழைத்து, நான் என் தாயின் வயிற்றில் இருக்கும்போது என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தினார்.

2
- וַיָּשֶׂם ஆக்கினார்
- פִּי என்-வாயை H6310
- כְּחֶרֶב வாளைப்போல H2719
- חַדָּה கூர்மையான H2299
- בְּצֵל நிழலில் H6738
- יָדוֹ அவர்-கரத்தின் H3027
- הֶחְבִּיאָנִי மறைத்தார்-என்னை H2244
- וַיְשִׂימֵנִי ஆக்கினார்-என்னை
- לְחֵץ அம்பாக H2671
- בָּרוּר தூய்மையான H1305
- בְּאַשְׁפָּתוֹ அவர்-அம்பறாதூணியில் H0827
- הִסְתִּירָנִי׃ மறைத்தார்-என்னை H5641

> அவர் என் வாயைக் கூர்மையான பட்டயமாக்கி, தமது கரத்தின் நிழலினால் என்னை மறைத்து, என்னைக் கூர்மையான அம்பாக்கி, என்னைத் தமது அம்புகளை வைக்கும் பையிலே மூடிவைத்தார்.

3
- וַיֹּאמֶר சொன்னார் H0559
- לִי எனக்கு
- עַבְדִּי־ என்-அடியானே H5650
- אָתָּה நீ
- יִשְׂרָאֵל இஸ்ரவேலே H3478
- אֲשֶׁר־ யாரில்
- בְּךָ உன்னில்
- אֶתְפָּאָר׃ மகிமைப்படுவேன்

> அவர் என்னை நோக்கி: நீ என் ஊழியக்காரன்; இஸ்ரவேலே, நான் உன்னில் மகிமைப்படுவேன் என்றார்.

4
- וַאֲנִי நானும் H0589
- אָמַרְתִּי சொன்னேன் H0559
- לְרִיק வீணாக H7385
- יָגַעְתִּי உழைத்தேன் H3021
- לְתֹהוּ வெறுமைக்கும் H8414
- וְהֶבֶל மாயைக்கும் H1892
- כֹּחִי என்-பலத்தை
- כִלֵּיתִי செலவழித்தேன் H3615
- אָכֵן நிச்சயமாக H0403
- מִשְׁפָּטִי என்-நியாயம் H4941
- אֶת־ — H0854
- יְהוָה யெகோவாவிடத்தில் H3068
- וּפְעֻלָּתִי என்-வெகுமதியும் H6468
- אֶת־ — H0854
- אֱלֹהָי׃ என்-தேவனிடத்தில் H0430

> அதற்கு நான்: வீணாக உழைக்கிறேன், வீணாகவும் பயனற்றதாகவும் என் பெலனைச் செலவழிக்கிறேன்; ஆகிலும் என் நியாயம் கர்த்தரிடத்திலும், என் பலன் என் தேவனிடத்திலும் இருக்கிறது என்று சொன்னேன்.

5

| וְעַתָּה | אָמַר | יְהוָה | יֹצְרִי | מִבֶּטֶן |
|---|---|---|---|---|
| இப்போதும் | சொல்கிறார் | யெகோவா | உருவாக்கியவர்-என்னை | கர்ப்பத்திலிருந்து |
| H6258 | H0559 | H3068 | H3335 | H0990 |

| לְעֶבֶד | לוֹ | לְשׁוֹבֵב | יַעֲקֹב | אֵלָיו | וְיִשְׂרָאֵל | [לא] |
|---|---|---|---|---|---|---|
| அடிமையாக | அவருக்கு | திரும்பச்செய்ய | யாக்கோபை | அவரிடத்தில் | இஸ்ரவேலும் | — |
| H5650 | | H7725 | H3290 | H0413 | H3478 | H3808 |

| (לוֹ) | יֵאָסֵף | וְאֶכָּבֵד | בְּעֵינֵי | יְהוָה | וֵאלֹהַי |
|---|---|---|---|---|---|
| அவருக்கு | சேர்க்கப்படும் | மகிமைப்படுவேன் | கண்களில் | யெகோவாவின் | என்-தேவனும் |
| | H0622 | H3513 | | H3068 | H0430 |

| הָיָה | עֻזִּי׃ |
|---|---|
| ஆனார் | என்-பலம் |
| H1961 | H5797 |

> யாக்கோபைத் தம்மிடத்தில் திருப்பும்படி நான் தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் யெகோவா தமக்கு ஊழியக்காரனாக என்னை உருவாக்கினார்; இஸ்ரவேலோ சேராதேபோகிறது; ஆகிலும் யெகோவாவுடைய பார்வையில் கனமடைவேன், என் தேவன் என் பெலனாயிருப்பார்.

6

| וַיֹּאמֶר | נָקֵל | מִהְיוֹתְךָ | לִי | עֶבֶד | לְהָקִים | אֶת־ |
|---|---|---|---|---|---|---|
| சொன்னார் | அற்பமானது | நீ-இருப்பதிலிருந்து | எனக்கு | அடிமையாக | எழுப்புவதற்கு | — |
| H0559 | H7043 | H1961 | | H5650 | | H0853 |

| שִׁבְטֵי | יַעֲקֹב | [ונצירי] | (וּנְצוּרֵי) | יִשְׂרָאֵל |
|---|---|---|---|---|
| கோத்திரங்களை | யாக்கோபின் | — | காக்கப்பட்டவர்களையும் | இஸ்ரவேலின் |
| H7626 | H3290 | H5341 | H5341 | H3478 |

| לְהָשִׁיב | וּנְתַתִּיךָ | לְאוֹר | גּוֹיִם | לִהְיוֹת |
|---|---|---|---|---|
| திரும்பச்செய்ய | கொடுப்பேன்-உன்னை | வெளிச்சமாக | ஜாதிகளுக்கு | ஆகிருப்பதற்கு |
| H7725 | H5414 | H0216 | | H1961 |

| יְשׁוּעָתִי | עַד־ | קְצֵה | הָאָרֶץ׃ | ס |
|---|---|---|---|---|
| என்-இரட்சிப்பு | வரை | முனையின் | பூமியின் | — |
| H3444 | H5704 | | H0776 | |

> யாக்கோபின் வம்சங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும், நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்பகாரியமாயிருக்கிறது; நீர் பூமியின் முடிவுவரைக்கும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை தேசங்களுக்கு ஒளியாகவும் வைப்பேன் என்கிறார்.

7

כֹּה இவ்வாறு H3541 | אָמַר־ சொல்கிறார் H0559 | יְהוָה யெகோவா H3068 | גֹּאֵל மீட்பர் | יִשְׂרָאֵל இஸ்ரவேலின் H3478 | קְדוֹשׁוֹ அவர்-பரிசுத்தர் H6918

לִבְזֹה־ அலட்சியமான H0960 | נֶפֶשׁ ஆத்துமாவை H5315 | לִמְתָעֵב அருவருப்பான H8581 | גּוֹי ஜாதியினால் | לְעֶבֶד அடிமையாக H5650 | מֹשְׁלִים ஆளுபவர்களின் H4910

מְלָכִים அரசர்கள் H4428 | יִרְאוּ பார்ப்பார்கள் H7200 | וָקָמוּ எழுவார்கள் | שָׂרִים பிரபுக்கள் H8269 | וְיִשְׁתַּחֲווּ வணங்குவார்கள் H7812 | לְמַעַן நிமித்தமாக H4616

יְהוָה யெகோவாவின் H3068 | אֲשֶׁר யார் | נֶאֱמָן உண்மையுள்ளவர் H0539 | קְדֹשׁ பரிசுத்தர் H6918 | יִשְׂרָאֵל இஸ்ரவேலின் H3478

וַיִּבְחָרֶךָּ׃ தெரிந்துகொண்டார்-உன்னை H0977

> இஸ்ரவேலின் மீட்பரும் அதின் பரிசுத்தருமாகிய யெகோவா, மனிதர்களால் அசட்டைசெய்யப்பட்டவரும், தேசங்களால் அருவருக்கப்பட்டவரும், அதிகாரிகளுக்கு ஊழியக்காரனுமாயிருக்கிறவரை நோக்கி, உண்மையுள்ள யெகோவா நிமித்தமும், உம்மைத் தெரிந்துகொண்ட இஸ்ரவேலின் பரிசுத்தர்நிமித்தமும், ராஜாக்கள் கண்டு எழுந்திருந்து, பிரபுக்கள் பணிந்துகொள்வார்கள் என்று சொல்கிறார்.

8

כֹּה இவ்வாறு H3541 | אָמַר சொல்கிறார் H0559 | יְהוָה யெகோவா H3068 | בְּעֵת நேரத்தில் H6256 | רָצוֹן தயவின் H7522 | עֲנִיתִיךָ பதிலளித்தேன்-உனக்கு

וּבְיוֹם நாளில்-மற்றும் H3117 | יְשׁוּעָה இரட்சிப்பின் H3444 | עֲזַרְתִּיךָ உதவினேன்-உனக்கு H5826 | וְאֶצָּרְךָ காப்பேன்-உன்னை H5341

וְאֶתֶּנְךָ கொடுப்பேன்-உன்னை H5414 | לִבְרִית உடன்படிக்கையாக H1285 | עָם ஜனத்தின் | לְהָקִים எழுப்புவதற்கு | אֶרֶץ பூமியை H0776

לְהַנְחִיל சுதந்திரமாக்க H5157 | נְחָלוֹת வீதம்பெற்ற H5159 | שֹׁמֵמוֹת׃ பாழானவைகளை H8074

> பின்னும் யெகோவா: அனுக்கிரகக் காலத்திலே நான் உமக்குச் செவிகொடுத்து, இரட்சணிய நாளிலே உமக்கு உதவி செய்தேன்; நீர் பூமியைச் சீர்ப்படுத்தி, பாழாய்க்கிடக்கிற இடங்களைச் சொந்தமாக்கிக்கொள்ளவும்;

9

לֵאמֹר சொல்வதற்கு H0559 | לַאֲסוּרִים கட்டப்பட்டவர்களுக்கு H0631 | צֵאוּ புறப்படுங்கள் H3318 | לַאֲשֶׁר இருளில்-இருக்கிறவர்களுக்கு | בַּחֹשֶׁךְ இருளில் H2822

הִגָּלוּ வெளிப்படுங்கள் H1540 | עַל־ மீது | דְּרָכִים வழிகளில் H1870 | יִרְעוּ மேய்வார்கள் | וּבְכָל־ எல்லா-மற்றும் H3605 | שְׁפָיִים மேடுகளில் H8205

מַרְעִיתָם׃ அவர்கள்-மேய்ச்சல் H4830

> கட்டுண்டவர்களை நோக்கி: புறப்பட்டுப்போங்கள் என்றும்; இருளில் இருக்கிறவர்களை நோக்கி: வெளியே வாருங்கள் என்றும் சொல்லவும், நான் உம்மைக் காப்பாற்றி, உம்மை மக்களுக்கு உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்; அவர்கள் வழியோரங்களிலே மேய்வார்கள்; சகல மேடுகளிலும் அவர்களுக்கு மேய்ச்சல் உண்டாயிருக்கும்.

10
לֹא இல்லை H3808
יִרְעָבוּ பசியடைவார்கள் H7456
וְלֹא இல்லை H3808
יִצְמָאוּ தாகமடைவார்கள் H6770
וְלֹא־ இல்லை H3808
יַכֵּם அடிக்காது-அவர்களை H5221
שָׁרָב வெப்பமும் H8273
וָשָׁמֶשׁ சூரியனும் H8121
כִּי־ எனெனில்
מְרַחֲמָם இரக்கம்காட்டுகிறவர் H7355
יְנַהֲגֵם நடத்துவார்-அவர்களை
וְעַל־ நீர்ச்சுமைகளின்-மேல்-மற்றும்
מַבּוּעֵי நீரூற்றுகளின் H4002
מַיִם தண்ணீரின் H4325
יְנַהֲלֵם׃ நடத்துவார்-அவர்களை H5095

அவர்கள் பசியாயிருப்பதுமில்லை, தாகமாயிருப்பதுமில்லை; உஷ்ணமாகிலும், வெயிலாகிலும் அவர்கள்மேல் படுவதுமில்லை; அவர்களுக்கு இரங்குகிறவர் அவர்களை நடத்தி, அவர்களை நீரூற்றுகளிடத்திற்குக் கொண்டுபோய்விடுவார்.

11
וְשַׂמְתִּי ஆக்குவேன்
כָל־ எல்லா H3605
הָרַי என்-மலைகளை H2022
לַדָּרֶךְ வழியாக H1870
וּמְסִלֹּתַי என்-பெருவழிகளும் H4546
יְרֻמוּן׃ உயர்த்தப்படும்

என் மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன்; என் பாதைகள் உயர்த்தப்படும்.

12
הִנֵּה־ இதோ H2009
אֵלֶּה இவர்கள் H0428
מֵרָחוֹק தூரத்திலிருந்து H7350
יָבֹאוּ வருவார்கள் H0935
וְהִנֵּה־ இதோ H2009
אֵלֶּה இவர்கள் H0428
מִצָּפוֹן வடக்கிலிருந்து H6828
וּמִיָּם மேற்கிலிருந்தும் H3220
וְאֵלֶּה இவர்கள் H0428
מֵאֶרֶץ தேசத்திலிருந்து H0776
סִינִים׃ சீனிமின் H5515

இதோ, இவர்கள் தூரத்திலிருந்து வருவார்கள்; இதோ, அவர்கள் வடக்கிலும் மேற்கிலுமிருந்து வருவார்கள்; இவர்கள் அஸ்வான் தேசத்திலுமிருந்து வருவார்கள் என்கிறார்.

13
רָנּוּ பாடுங்கள்
שָׁמַיִם வானங்களே H8064
וְגִילִי களிகூரு H1523
אָרֶץ பூமியே H0776
]יפצחו[ — H6476
)וּפִצְחוּ( தொடங்கள் H6476
הָרִים மலைகளே H2022
רִנָּה ஆர்ப்பரிப்பை H7440
כִּי־ எனெனில்
נִחַם ஆறுதல்-அளித்தார் H5162
יְהוָה யெகோவா H3068
עַמּוֹ அவர்-ஜனத்தை
וַעֲנִיָּו அவர்-சிறுமையானவர்களை H6041
יְרַחֵם׃ இரக்கம்காட்டுவார் H7355
ס —

வானங்களே, கெம்பீரித்துப் பாடுங்கள்; பூமியே, களிகூரு; மலைகளே, கெம்பீரமாக முழங்குங்கள்; யெகோவா தம்முடைய மக்களுக்கு ஆறுதல் செய்தார்; சிறுமைப்பட்டிருக்கிற தம்முடையவர்கள்மேல் இரக்கமாயிருப்பார்.

14
וַתֹּאמֶר சொன்னது H0559
צִיּוֹן சீயோன் H6726
עֲזָבַנִי கைவிட்டார்-என்னை
יְהוָה யெகோவா H3068
וַאדֹנָי ஆண்டவரும் H0136
שְׁכֵחָנִי׃ மறந்தார்-என்னை H7911

சீயோனோ: யெகோவா என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்கிறாள்.

15
הֲתִשְׁכַּח மறப்பாளா H7911
אִשָּׁה பெண் H0802
עוּלָהּ தன்-குழந்தையை H5764
מֵרַחֵם இரக்கம்காட்டாமல் H7355
בֶּן־ மகனை
בִּטְנָהּ தன்-கர்ப்பத்தின் H0990
גַּם־ ஆம் H1571
אֵלֶּה இவர்கள் H0428
תִשְׁכַּחְנָה மறப்பார்கள் H7911
וְאָנֹכִי நானோ H0595
לֹא இல்லை H3808
אֶשְׁכָּחֵךְ׃ மறப்பேன்-உன்னை H7911

> ஒரு பெண் தன் கர்ப்பத்தின் குழந்தைக்கு இரங்காமல், தன் மகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை.

16 הֵן இதோ H2005 | עַל־ மீது | כַּפַּיִם கைஉள்ளங்களில் H3709 | חַקֹּתִיךְ பொறித்தேன்-உன்னை H2710 | חוֹמֹתַיִךְ உன்-மதில்கள் H2346 | נֶגְדִּי என்-முன் H5048
תָּמִיד׃ எப்போதும் H8548

> இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது.

17 מִהֲרוּ விரைந்தனர் | בָּנָיִךְ உன்-பிள்ளைகள் | מְהָרְסַיִךְ அழிக்கிறவர்களும் H2040 | וּמַחֲרִבַיִךְ பாழாக்கிறவர்களும் | מִמֵּךְ உன்னிடமிருந்து
יֵצֵאוּ׃ புறப்படுவார்கள் H3318

> உன் மகன்கள் துரிதமாக வருவார்கள்; உன்னை நிர்மூலமாக்கினவர்களும் உன்னைப் பாழாக்கினவர்களும் உன்னை விட்டுப் புறப்பட்டுப்போவார்கள்.

18 שְׂאִי־ உயர்த்து H5375 | סָבִיב சுற்றிலும் H5439 | עֵינַיִךְ உன்-கண்களை | וּרְאִי பார் H7200 | כֻּלָּם எல்லாரும் H3605 | נִקְבְּצוּ சேர்ந்தனர் H6908 | בָאוּ־ வந்தனர் H0935 | לָךְ உனக்கு
חַי־ உயிரோடு | אָנִי நான் H0589 | נְאֻם־ உரையின்-படி H5002 | יְהוָה யெகோவாவின் H3068 | כִּי எனெனில் | כֻלָּם எல்லாரையும் H3605 | כָּעֲדִי ஆபரணமாக H5716
תִלְבָּשִׁי அணிவாய் H3847 | וּתְקַשְּׁרִים கட்டுக்கொள்வாய்-அவற்றை H7194 | כַּכַּלָּה׃ மணமகளைப்போல H3618

> உன் கண்களை ஏறெடுத்துச் சுற்றிலும் பார்; அவர்களெல்லோரும் ஏகமாகக்கூடி உன்னிடத்தில் வருகிறார்கள்; நீ அவர்களெல்லோரையும் ஆபரணமாக அணிந்து, மணமகள் அணிந்துகொள்வதுபோல, நீ அவர்களை அணிந்துகொள்வாய் என்று, என் ஜீவனைக்கொண்டு சொல்கிறேன் என்று யெகோவா உரைக்கிறார்.

19 כִּי எனெனில் | חָרְבֹתַיִךְ உன்-பாழானவைகளும் H2723 | וְשֹׁמְמֹתַיִךְ உன்-பாழ்படைகளும் H8074 | וְאֶרֶץ தேசமும் H0776 | הֲרִסֻתֵךְ உன்-அழிவுகளும் H2035
כִּי எனெனில் | עַתָּה இப்போது H6258 | תֵּצְרִי நெருக்கமாகும் H3334 | מִיּוֹשֵׁב குடியிருப்பவரிடமிருந்து H3427 | וְרָחֲקוּ தூரமாவார்கள் H7368
מְבַלְּעָיִךְ׃ உன்னை-விழுங்குகிறவர்கள் H1104

> அப்பொழுது உன் வனாந்திரங்களும், உன் பாழான இடங்களும், நிர்மூலமான உன் தேசமும், இனிக் குடிமக்களின் திரளினாலே உனக்கு நெருக்கமாயிருக்கும்; உன்னை விழுங்கினவர்கள் தூரமாவார்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| שִׁכֻּלַ֔יִךְ | בְנֵ֣י | בְאָזְנַ֙יִךְ֙ | יֹאמְר֤וּ | ע֚וֹד | 20 |
| உன்-பிள்ளையிழப்பின் | பிள்ளைகள் | உன்-காதுகளில் | சொல்வார்கள் | இன்னும் | |
| H7923 | | H0241 | H0559 | H5750 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| וְאֵשֵֽׁבָה׃ | לִּ֖י | גְּשָׁה־ | הַמָּק֖וֹם | לִ֥י | צַר־ |
| உட்காருவேன் | எனக்கு | நெருங்கு | இடம் | எனக்கு | நெருக்கமானது |
| H3427 | | H5066 | H4725 | | |

> பிள்ளைகளற்றிருந்த உனக்கு உண்டாயிருக்கப்போகிற பிள்ளைகள்: இடம் எங்களுக்கு நெருக்கமாயிருக்கிறது; நாங்கள் குடியிருக்கும்படிக்கு விலகியிரு என்று, உன் காதுகள் கேட்கச்சொல்வார்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| אֵ֔לֶּה | אֶת־ | לִי֙ | יָֽלַד־ | מִ֤י | בִּלְבָבֵ֗ךְ | וְאָמַ֣רְתְּ | 21 |
| இவர்களை | — | எனக்கு | பெற்றெடுத்தார் | யார் | உன்-இருதயத்தில் | சொல்வாய் | |
| H0428 | H0853 | | H3205 | H4310 | H3824 | H0559 | |

| | | | |
|---|---|---|---|
| וְגֹלָה֙ | וְגַלְמוּדָ֔ה | שְׁכוּלָ֥ה | וַאֲנִ֛י |
| நாடுகடத்தப்பட்டவளும் | தனிமையானவளும் | பிள்ளையிழந்தவளும் | நானும் |
| H1540 | H1565 | | H0589 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| אֲנִי֙ | הֵ֤ן | גִּדֵּ֔ל | מִ֣י | וְאֵ֨לֶּה֙ | וְסוּרָ֔ה |
| நான் | இதோ | வளர்த்தார் | யார் | இவர்களையும் | தள்ளப்பட்டவளும் |
| H0589 | H2005 | H1431 | H4310 | H0428 | H5493 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| פ | הֵֽם׃ | אֵיפֹ֥ה | אֵ֖לֶּה | לְבַדִּ֔י | נִשְׁאַ֣רְתִּי |
| — | அவர்கள் | எங்கே | இவர்கள் | தனியாக | தனிமையாக-மீதியிருந்தேன் |
| | H1992 | H0375 | H0428 | H0905 | H7604 |

> அப்பொழுது நீ: இவர்களை எனக்குப் பிறப்பித்தவர் யார்? நான் பிள்ளைகளற்றும், தனித்தும், சிறைப்பட்டும், நிலையற்றும் இருந்தேனே; இவர்களை எனக்கு வளர்த்தவர் யார்? இதோ, நான் தனிமையாக விடப்பட்டிருந்தேனே; இவர்கள் எங்கேயிருந்தவர்கள்? என்று உன் இருதயத்தில் சொல்வாய்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| אֶל־ | אֶשָּׂ֤א | הִנֵּ֨ה | יְהוִ֗ה | אֲדֹנָ֣י | אָמַר֮ | כֹּֽה־ | 22 |
| நோக்கி | உயர்த்துவேன் | இதோ | யெகோவா | ஆண்டவராகிய | சொல்கிறார் | இவ்வாறு | |
| H0413 | H5375 | H2009 | H3069 | H0136 | H0559 | H3541 | |

| | | | | |
|---|---|---|---|---|
| אָרִ֣ים | עַמִּ֖ים | וְאֶל־ | יָדִ֔י | גּוֹיִם֙ |
| என்-கொடியை | உயர்த்துவேன் | ஜனங்களிடத்தில்-மற்றும் | என்-கரத்தை | ஜாதிகளிடத்தில் |
| | | H0413 | H3027 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| עַל־ | וּבְנֹתַ֖יִךְ | בְּחֹ֔צֶן | בָּנַ֙יִךְ֙ | וְהֵבִ֤יאוּ | נִסִּ֑י |
| — | தோளில்-மேல் | உன்-மகள்களும் | மடியில் | உன்-மகன்களை | கொண்டுவருவார்கள் |
| | H1323 | H2684 | | H0935 | H5251 |

| | |
|---|---|
| תִּנָּשֶֽׂאנָה׃ | כָּתֵ֖ף |
| — | தூக்கப்படுவார்கள் |
| H5375 | H3802 |

> இதோ, தேசங்களுக்கு நேராக என் கையை உயர்த்தி, மக்களுக்கு நேராக என் கொடியை ஏற்றுவேன்; அப்பொழுது உன் மகன்களை பெரும் கைகளில் ஏந்திக்கொண்டு வருவார்கள்; உன் மகள்கள் தோளின்மேல் எடுத்துக்கொண்டு வரப்படுவார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறார்.

23

| וְהָי֨וּ | מְלָכִ֜ים | אֹֽמְנַ֗יִךְ | וְשָׂרֽוֹתֵיהֶם֙ |
|---|---|---|---|
| இருப்பார்கள் | அரசர்கள் | உன்-வளர்ப்பதந்தையர்கள் | அவர்கள்-ராணிகளும் |
| H1961 | H4428 | H0539 | H8282 |

| מֵינִ֣יקֹתַ֔יִךְ | אַפַּ֗יִם | אֶ֚רֶץ | יִשְׁתַּ֣חֲווּ | לָ֔ךְ | וַעֲפַ֥ר |
|---|---|---|---|---|---|
| உன்-பாலூட்டுபவர்கள் | முகத்தால் | தரையில் | வணங்குவார்கள் | உனக்கு | புழுதியும் |
| H3243 | H0639 | H0776 | H7812 | | H6083 |

| רַגְלַ֖יִךְ | יְלַחֵ֑כוּ | וְיָדַ֙עַתְּ֙ | כִּֽי־ | אֲנִ֣י | יְהוָ֔ה | אֲשֶׁ֥ר |
|---|---|---|---|---|---|---|
| உன்-பாதங்களின் | நக்குவார்கள் | அறிவாய் | எனெனில் | நான் | யெகோவா | யாரில் |
| H7272 | H3897 | H3045 | | H0589 | H3068 | |

| לֹֽא־ | יֵבֹ֖שׁוּ | קֹוָֽי׃ | ס |
|---|---|---|---|
| இல்லை | வெட்கமடைவார்கள் | என்னை-காத்திருக்கிறவர்கள் | — |
| H3808 | H0954 | | |

> ராஜாக்கள் உன்னை வளர்க்கும் தந்தைகளும், அவர்களுடைய நாயகிகள் உன் வளர்க்கும் தாய்களுமாயிருப்பார்கள்; தரையிலே முகங்குப்புறவிழுந்து உன்னைப் பணிந்து, உன் கால்களின் தூளை நக்குவார்கள்; நான் யெகோவா, எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்பதை அப்பொழுது அறிந்துகொள்வாய்.

24

| הֲיֻקַּ֥ח | מִגִּבּ֖וֹר | מַלְק֑וֹחַ | וְאִם־ | שְׁבִ֥י |
|---|---|---|---|---|
| எடுக்கப்படுமா | பலசாலியிடமிருந்து | கொள்ளை | அல்லது-இனி | சிறையை |
| H3947 | H1368 | | | |

| צַדִּ֖יק | יִמָּלֵֽט׃ |
|---|---|
| நீதிமானவனின் | விடுவிக்கப்படுமா |
| H6662 | H4422 |

> பராக்கிரமன் கையிலிருந்து கொள்ளைப்பொருளைப் பறிக்கமுடியுமோ? அல்லது நீதியாய்ச் சிறைப்பட்டுப்போனவர்களை விடுவிக்கமுடியுமோ?

25

| כִּי־ | כֹ֣ה | אָמַ֣ר | יְהוָ֗ה | גַּם־ | שְׁבִ֤י | גִבּוֹר֙ |
|---|---|---|---|---|---|---|
| எனெனில் | இவ்வாறு | சொல்கிறார் | யெகோவா | ஆம் | சிறையையும் | பலசாலியின் |
| | H3541 | H0559 | H3068 | H1571 | | H1368 |

| יִקָּ֔ח | וּמַלְק֥וֹחַ | עָרִ֖יץ | יִמָּלֵ֑ט | וְאֶת־ |
|---|---|---|---|---|
| எடுக்கப்படும் | கொள்ளையும் | கொடியவனின் | விடுவிக்கப்படும் | உன்னோடு-மற்றும் |
| H3947 | | H6184 | H4422 | H0854 |

| יְרִיבֵךְ֙ | אָנֹכִ֣י | אָרִ֔יב | וְאֶת־ | בָּנַ֖יִךְ | אָנֹכִ֥י | אוֹשִֽׁיעַ׃ |
|---|---|---|---|---|---|---|
| வாதிடுகிறவர்களை | நான் | வாதிடுவேன் | உன்-மற்றும் | பிள்ளைகளை | நான் | இரட்சிப்பேன் |
| H3401 | H0595 | H7378 | H0853 | | H0595 | H3467 |

> என்றாலும் இதோ, பராக்கிரமனால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள்; பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும்; உன்னோடு வழக்காடுகிறவர்களுடன் நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக்கொள்வேன்.

26

| | | | | |
|---|---|---|---|---|
| בְּשָׂרָ֔ם | אֶת־ | מוֹנַ֙יִךְ֙ | אֶת־ | וְהַאֲכַלְתִּ֤י |
| அவர்கள்-மாம்சத்தை | — | உன்-உன்னைஉழல்பவர்களை | — | தின்னப்பண்ணுவேன் |
| H1320 | H0853 | H3238 | H0853 | H0398 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| בָּשָׂ֗ר | כָל־ | וְיָדְע֣וּ | יִשְׁכָּר֑וּן | דָּמָ֣ם | וְכֶעָסִ֖יס |
| மாம்சம் | எல்லா | அறிவார்கள் | குடிப்பார்கள் | அவர்கள்-இரத்தத்தை | திராட்சைச்சாறுபோல |
| H1320 | H3605 | H3045 | H7937 | H1818 | H6071 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| אֲבִ֥יר | וְגֹאֲלֵ֖ךְ | מֽוֹשִׁיעֵ֔ךְ | יְהוָה֙ | אֲנִ֤י | כִּ֣י |
| வல்லமையானவர் | உன்-மீட்பரும் | உன்-இரட்சிப்பவர் | யெகோவா | நான் | எனெனில் |
| H0046 | | H3467 | H3068 | H0589 | |

| | |
|---|---|
| ס | יַעֲקֹֽב׃ |
| — | யாக்கோபின் |
| | H3290 |

> உன்னை ஒடுக்கினவர்களுடைய மாம்சத்தை அவர்களுக்கே சாப்பிடக்கொடுப்பேன்; மதுபானத்தால் வெறிகொள்வதுபோல் தங்களுடைய இரத்தத்தினால் வெறிகொள்வார்கள்; கர்த்தரும் யாக்கோபின் வல்லவருமாகிய நான் உன் இரட்சகரும் உன் மீட்பருமாயிருக்கிறதை மாம்சமான அனைவரும் அறிந்துகொள்வார்களென்று யெகோவா சொல்கிறார்.